Seats in Pallavan Transport Corporation buses

* 217 Q.—THIRU A. SWAMIDHAS: Will the Hon. the Minister for Transport be pleased to state the total number of seats increased in the Pallavan Transport Corporation buses during 1971–72?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பல்லவன் போக்குவரத்துக் கழகம், 1972, ஜனவரி 1 ஆம் நாளில் அமைக்கப்பட்டது. 1—1—1972-லிருந்து 31—3—1972 வரை அக் கழகத்தின் பேருந்துகள் தொகுதியில் 14 பேருந்துகள் சேர்க்கப்பட்டன. இத்தக் கால அளவில், பேருந்து ஒன்றுக்கு 60 இருக்கைகள் விதம் பேருந்து ஒன்று ஒரு நாளில் 16 தடவைகள் பயணம் செய்கின்றன என்ற சராசரிக் கணக்கில் ஒரு நாளைக்கு 13,440 இருக்கைகள் பல்லவன் கழகத்தால் கூடுதலாக்கப்பட்டன.

திரு. எஸ். வடிவேல்: தலைவர் அவர்களே, அரசுடமையாக்கப்பட்ட பல்லவன், சோழன், பாண்டியன் கழகங்களின் பஸ்களில் எம்.எல்.ஏக்கள் ஏறிப் போவதற்காக வைத்திருக்கின்ற பாஸ் செல்லாது என்று என்னை வைத்தீஸ்வரன் கோவிலில் இறக்கிவிட்டார்கள். அதை அமைச்சரிடத்திலே நேரிலே சொன்னேன். அது மாதிரி இறக்கிவிடாமலிருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதன்பேரில் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், பொது மக்களுக்கு நிரம்பத் தொண்டாற்றுகின்றவர்கள் அவர்கள். ஆதலால், அவர்கள் எல்லாப் பேருந்துகளையும் பயன்படுத்துவதற்கான ஆணையை அரசு ஏற்கனவே பிறப்பித்துவிட்டது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த பல்லவன் போக்குவரத்துக் கழகத்து பஸ்களிலே நெரிசல் நேரத்திலே ஏறுவதற்குக் கஷ்டமாக இருக்கிறது. நெரிசல் நேரங்களில் 14 பஸ்கள்தான் கூட்டத்திற்காக விடப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, நெரிசல் நேரத்திலே அதிக பஸ்களை விடுவதற்கு அரசாங்கம் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1973 மார்ச் 2

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, முதல் மூன்று மாதத்திற்குத்தான் 14 பஸ்கள். அடுத்து 1—4—72-லிருந்து 31—12—72 வரையிலும் மேலும் 30 பஸ்கள் கூடுதலாக ஆக்கப்பட்டு இருக்கின்றன. ஆகையினாலே பல்லவன் போக்குவரத்துக் கழகம் என்று ஆரம்பித்ததற்குப் பிறகு 44 பஸ்கள் இதுவரையில் கூடுதலாக ஆக்கப்பட்டு இருக்கின்றன.

திரு. கா. வேழவேந்தன் : துணைத் தலைவர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகம் என்பது தொண்டை மண்டலத்தை மட்டும் அடக்குவதாகப் பெயர் அமைந்திருக்கிறது. செங்கற்பட்டு மாவட்டத்திலே ரூரல் ரோட்ஸ் திட்டம், இன்னும் மற்ற மற்றத் திட்டங்களின் மூலமாக நல்ல இணைப்புச் சாலைகள் ஆங்காங்கே போடப்பட்டிருக்கின்றன. இவற்றில் புதிய பேருந்துகள் ஓட்டுவதற்கு வசதியில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். செங்கற்பட்டு மாவட்டத்திலே எல்லாச் சாலைகளையும் இணைக்கக்கூடிய வகையிலே அதிகமான பேருந்துகளை விடுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தமிழகம் முழுவதும் சாலைகளைப் போட வேண்டுமென்பதும், சாலைகளிலே பஸ்களை விடவேண்டுமென்பதுதான் தமிழக அரசினுடைய கொள்கையாகும். செங்கற்பட்டு மாவட்டத்தில் வேறு வழித்தடங்களைத் திறப்பதற்கு இடம் இருக்குமானால் அவற்றை பல்லவன் போக்குவரத்துக் கழகம் கவனத்தில் கொண்டு ஏற்கனவே இருக்கின்ற பஸ் வசதிகளை நீட்டித்துக் கொடுக்கவோ அல்லது மாற்று வசதிகளைச் செய்து கொடுக்கவோ முன்வரலாம். ஆனால் எல்லா இடங்களிலும் புதிய பஸ்கள் விட வேண்டுமென்ற அவசியமில்லை. இப்பொழுது போதுமான புதிய பஸ்கள் கிடைப்பதும் இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : நெரிசலாக இருக்கும்பொழுது பஸ்களிலே நின்று பயணம் செய்வது கஷ்டமாக இருக்கிறது. எனவே நெரிசலைக் குறைப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சென்னை மாநகரத்திலே பஸ்களில் நெரிசலாக இருக்கின்ற நேரத்தில் நின்று பயணம் செய்வது கஷ்டமாகத்தான் இருக்கிறது. இதைப் போக்கக்கூடிய முறையில் எப்படி வழித்தடங்களை மாற்றியமைக்கலாம் என்பதைப்பற்றிப் பரிசிலனை செய்து ஆலோசனை கூற பேராசிரியர் அய்யாசாமி அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவின் பரிந்துரை அரசுக்குக் கிடைத்திருக்கிறது. அந்த அறிக்கை போக்குவரத்து ஆய்வுக் குழுவிலே பரிசீலிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டு

1973 மார்ச் 2]

செயல்படத் துவங்கினால் மவுண்ட் ரோடு, பூந்தமல்லி ரோடு இந்த இரண்டு சாலைகளிலும் 3 நிமிடங்களுக்கு ஒரு பஸ் வீதம் விடலாம் என்ற ஏற்பாடு இருக்கிறது. உடனடியாக இப்படிப்பட்ட சீர்திருத்தங்களைச் செய்வதற்குப் பதிலாக மே மாதத்திலிருந்து அத்தகைய சீர்திருத்தங்களை முறையாக ஒவ்வொன்றாக செய்வதற்கு அரசாங்கம் முன்வரும்.

திரு. நா. காசிராமன் : பஸ்களிலே நெரிசல் நேரங்களிலே இருக்கைகளிலே உட்கார்ந்து பயணம்செய்யும் பிரயாணிகளுக்கும் ஸ்டாண்டிங் பாசஞ்சர்களுக்கும் உள்ள விகிதாச்சாரம் மொத்தமாக எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதுபற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை. நெரிசலான நேரங்களிலே சாதாரணமாக இவ்விகிதம் கூடுதலாக இருக்கும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : சிட்டி பஸ்களிலே நெரிசல் நேரங்களிலே பயணிகள் கம்பியைப் பிடித்துத் தொங்கிக்கொண்டு பயணம் செய்வதால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. அந்த விபத்துக்களைத் தடுத்து நிறுத்தக்கூடிய முறையில் ஸ்டாண்டிங் பாசஞ்சர்களின் எண்ணிக்கையைக் குறைக்க அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பொதுவாக இப்படிப்பட்ட நெரிசல் நேரங்களில் ஓடுகின்ற பேருந்துகளில் தொங்கிக்கொண்டு பயணம் செய்வது ஆபத்தானது என்பதை அடிக்கடி சொல்லிவருகிறோம். அப்படிச் சொல்வதனால் கூட கண்டக்டர்களுக்கும் பொதுமக்களுக்கும் சண்டை ஏற்படுகிறது என்பதை நாம் அறிவோம். வழித் தடங்களை மாற்றுதல், கூடுதலாகப் பேருந்துகளை விடுதல் போன்ற திட்டங்களை அரசாங்கம் படிப்படியாகக் கொண்டுவருவதன் மூலம் இப்பிரச்சினைகளைத் தீர்க்க வழிவகை காணலாம்.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : பயணிகளின் வசதிக்காக மாடி பஸ்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் உத்தேசம் உண்டா ? மாடி பஸ்களை விட்டால் தொங்கிக்கொண்டு போகக்கூடிய நிலைமை இருக்காதல்லவா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாடி பஸ்களிலே நின்றுகொண்டு பயணம் செய்வதற்கு இடம் இல்லை. உட்கார்ந்துதான் செல்ல வேண்டும். ஆனால் சாதாரண பஸ்களில் எந்த அளவுக்கு பயணிகள் செல்லுகிறார்களோ அந்த அளவிற்கு மாடி பஸ்களிலே செல்லமுடியாது, குறைவாகத்தான் செல்லமுடியும். மேலும் மாடி பஸ்களுக்கு ஆன சேஸிஸ் வெளிநாட்டிலிருந்து பெறவேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் நாம் இருந்துகொண்டிருக்கிறோம்.

[1973 மார்ச் 2

திரு. செ. கந்தப்பன் : அண்ணா போக்குவரத்துக் கழகம் என்ற நிறுவனம் துவக்கப்பட்டிருக்கிறதா? அதனுடைய விவரங்களை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கடந்த மாதம்தான் துவக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய விவரங்கள் என்னிடத்தில் இல்லை. ஆனால் துவக்கப்பட்டதிலிருந்து நல்ல முறையிலே வசூலாகிக்கொண்டு இருக்கிறது என்ற தகவல் மட்டும் வந்துகொண்டிருக்கிறது.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : பல்லவா போக்குவரத்துக் கழகத்தை பல்லவன் போக்குவரத்துக் கழகம் என்று மாற்றியமைத்ததற்கான காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : காரணம் தமிழ் இலக்கணம்தான்.

திரு. எம். தேவராசன் : ஸ்டாண்டிங் பாசஞ்சர்ஸ் 15 பேர்களுக்கு மேல் இருக்கக்கூடாது என்று கண்டக்டர்கள் கோரிக்கை விட்டிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அப்படியொன்றும் அவர்கள் கோரிக்கை விடவில்லை. ஓவர்லோட் கூடாது என்பதிலே அவர்கள் கவனமாக இருக்கிறார்கள். நமக்கும் அதிலே கருத்து வேறுபாடு இல்லை. அதைத் தவிர்ப்பதற்கு முயற்சி செய்ய வேண்டியதுதான். சென்னை மாநகரத்திலே தொழிலாளர்கள், அலுவலர்கள் யாவரும் ஒரே நேரத்திலே புறப்பட்டு சில குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்று வர வேண்டிய சூழ்நிலை இருப்பதாலேதான் இப்படிப்பட்ட பிரச்னை வருகிறது. இதைச் சிறிது சிறிதாக நாம் சமாளித்தாக வேண்டியிருக்கிறது.

திரு. த. சோனையா : தலைவர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழக பஸ்களிலே நெரிசல் இருக்கின்ற நேரங்களிலே மட்டுமல்ல, சாதாரணமாகக்கூட சில பேர்கள் ஓடுகின்ற பஸ்களிலே ஏறுவதும், இறங்குவதும் ஒரு பழக்கமாகக் கொண்டு இருப்பதால் அவர்கள் மீதாவது நடவடிக்கை எடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அது பொதுவாக வழிவழிவந்த பழக்கமாக இருக்கலாம். அந்தப் பழக்கம் கூடாது என்பதை அடிக்கடி வருகின்ற விபத்துக்களே எடுத்துக்காட்டுகின்றன.

1973 மார்ச் 2]

திரு. எம். சுரேந்திரன் : நகர பஸ்களிலே மட்டுமல்லாமல் மற்ற இடங்களிலே ஓடுகின்ற பஸ்களிலேயும்கூட எக்ஸ்பிரஸ் அல்லாத பஸ்களிலே ஓவர்லோட் ஏற்றுகிறார்கள். அதற்கு அரசு அனுமதித்து இருக்கிறதா? அதைப் பார்த்து தனியார் பஸ்களிலேயும் ஓவர்லோட் ஏற்றுகிறார்களே, இதையெல்லாம் கவனிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பயணிகளை ஏற்ற மறுக்கிறார்கள் என்ற குறையைவிட ஏராளமாக ஏற்றுகிறார்கள் என்ற குறையை நாம் பொறுத்துக் கொள்ளலாம்.

திரு. ஏ. எம். இராஜா : நெரிசலான நேரங்களில் கூட்டத்தைத் தவிர்ப்பதற்கு டிரெய்லர் பஸ்களை அதிகமாக விடுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : டிரெய்லர் பஸ்கள் மக்களுக்குப் பயனளிக்காது. அதைத் தவிர இதர பஸ்கள் செல்வதற்கும் அவற்றினால் கஷ்டம் ஏற்படுகிறது. மேலும் அவை குறைந்த வேகத்தில்தான் செல்ல முடியும். Mass Rapid Transit அதாவது, அண்டர்கிரவுண்ட் சிஸ்டம் கொண்டுவரக்கூடிய நிலைமை ஏற்பட்டாலொழிய சென்னை மாநகரத்தில் நிரந்தரமான பரிகாரம் காணுவது கடினமாக இருக்கும்.

திரு. எம். ஏ. லத்திப் : புதிதாகத் தொடங்கப்பட்டிருக்கின்ற அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் தலைமை அலுவலகம் எந்த இடத்திலே வைக்கப்பட்டிருக்கிறது? எந்த எந்த மாவட்டங்களை உட்படுத்தி அது செயல்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அண்ணா போக்குவரத்துக் கழகம் சேலம், தர்மபுரி, வட ஆற்காடு ஆகிய மூன்று மாவட்டங்களைச் சேர்த்துக் கொண்டிருக்கிறது. சேலத்திலேதான் அதனுடைய தலைமை அலுவலகம் அமைக்கப்பட்டிருக்கிறது. கடந்த பிப்ரவரி 15-ம் தேதியன்றுதான் அது துவங்கப்பட்டிருக்கிறது. அரசாங்க போக்குவரத்துத் துறையிலே ஏற்கனவே ஓடிக்கொண்டிருந்த 45 வழித்தடங்களை அவர்கள் நடத்தி வருகிறார்கள். அது நல்ல முறையிலே நடந்துவருகிறது.

பிராட்வே-பெரியபாளையம் வழித்தடம்

***218. வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வழித்தடம் எண் 137 பேருந்தினை பெரியபாளையத்திலிருந்து முக்கரம்பாக்கம் வரை நீட்டிக்கும் திட்டம் அரசு ஆய்வில் உள்ளதா?